**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (கூ.பொ.) திரு பெ. நடேசன், எம்.,இ., எம்.பி.ஏ., அவர்களால் 31.01.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **30.01.2019** இராசிபுரம் நகராட்சி

**<u>பொருள்கள்</u>**

(1) கோயமுத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண். 848/18/அ2 நாள் 18.12.2018–இல் 2018–19–ஆம் ஆண்டிற்கான நிர்வாக பங்குத் தொகை `. 50000/– செலுத்த கோரப்பட்டுள்ளது. எனவே, 2018–19–ஆம் ஆண்டு நிர்வாக பங்குத் தொகை `. 50000/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3250/18)

**தீர்மானம் எண். 486**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் எட்டாவது மாநில உயர்நிலைக் குழு பரிந்துரையின்படி, 28 மின்கல இயங்கு வாகனம் (BOV) மற்றும் 6 இலகுரக வாகனம் (LCV) வாங்க முறையே `. 50.40 இலட்சம் மற்றும் `. 33.60 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஆணை எண். 1191/பி3/2019 நாள் 21.01.2019–இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகளுக்கு 8–ஆவது மாநில உயர்நிலைக் குழு பரிந்துரையின்படி, ($8^{th}$ SHPC)

| | | |
|---|---|---|
| மத்திய அரசு பங்கு | 35% | 100% |
| தூய்மை பாரத திட்ட பங்கு (மாநில நிதி) | 55% | |
| உள்ளாட்சி பங்கு | 10% | |

மேற்படி விகிதாச்சாரத்தின்படி பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/107/19)

**தீர்மானம் எண். 487**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் லாரி வாகனம் பதிவு எண். TN 28 AZ 0992 ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய கடந்த 28.12.2018 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ஸ்ரீ ஜோதி முருகன் பேட்டரி ஒர்க்ஸ், சேலம். |
|---|---|---|---|
| 1. | அனைத்து ஆயில் டியூப் பில்டர் மாற்ற வேண்டும். | `. 18650/– | `. 19700/– |
| 2. | ஹைட்ராலிக் லிவர் ஹட் மாற்ற வேண்டும் | 31965/– | 32900/– |
| 3. | புதியதாக ஆயில் மாற்ற வேண்டும் | 13365/– | 13900/– |
| 4. | அசம்பளி கிளட்ச் பிளேட் மாற்ற வேண்டும் | 20965/– | 21900/– |
| | **மொத்தம் :-** | **84965/–** | **88400/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதன் ஒப்பந்ததாரர் ஸ்ரீ லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திற்கு மேற்கண்ட லாரியில் உள்ள பழுதுகளை சரிசெய்ய பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2725/18)

**தீர்மானம் எண். 488**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி குப்பைக் கிடங்கிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி சமன்படுத்தும் பணிக்கு நாமக்கல் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயின்டோசரை பயன்படுத்தி ஒரு மணி நேரத்திற்கு `. 840/– வீதம் 60 மணி நேரம் ஓட்ட மொத்த செலவினம் `. 50400/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது நிதியிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கலாம்.

(எச்1/42/19)

**தீர்மானம் எண். 489**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சி வார்டு–சி, பிளாக் எண். 2, நகர புல எண். 46–இல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நகர் மன்ற தீர்மானம் எண். 251 நாள் 21.02.2018–இல் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி `. 42.00 இலட்ச மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி கோரப்பட்டதில் சேலம், நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் ஆணை எண். 715/2015/டி1 நாள் 27.04.2018–இல் கட்டுமான வரைபடத்திற்கு, நகர் ஊரமைப்புத் துறை இயக்குநரது அனுமதி பெற தெரிவிக்கப்பட்டது.

சேலம், நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் கடித எண். 17770/2018/சேம3 நாள் 12.12.18–இல், இப்பகுதி அபிவிருத்தி திட்டம் எண். 2 தயாரிக்கப்பட்டு CPS பகுதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால் வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

(இ1/197/18)

**தீர்மானம் எண். 490**

மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

**(6)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயக்கும் டம்பர் பின் லாரி வாகனம் பதிவு எண். TN 28 AZ 0992 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் `. 80000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/140/19)

**தீர்மானம் எண். 491**

அனுமதிக்கப்பட்டது

**(7)** இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 22–இல் டவுன் சர்வே வார்டு–டி, பிளாக்–10, நகரளவு எண். 12/6–இல் மேற்கண்ட இடம் அமைகிறது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண். 10788/18/சேம3 நாள் 10.10.18–இன்படி அனுமதியற்ற மனைப்பிரிவிலுள்ள விற்கப்படாத மனைகள் மொத்தம் 17–இல் பூங்காவிற்காக 2.5 மனைகள் ஒதுக்கப்பட்டும், மீதமுள்ள மனைகளை வரன்முறை செய்தும் ஆணை வரப்பெற்றுள்ளது.

மேலும், இம்மனைகளிலுள்ள குறுக்கு சாலை மற்றும் பூங்கா 1–இல் 674.50 சதுரடியாகவும், பூங்கா 2–இல் 2062.50 சதுரடியாகவும், சாலையின் மொத்த பரப்பு 6303 சதுரடியாகவும் வரைபடத்தில் உள்ளவாறு திரு A. மதியழகன் என்பவரது மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பூங்காக்கள் இரண்டையும் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி பெயரில் பொது உபயோகத்திற்காக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளவாறு பதிவுத் துறையின் மூலம் தானமாக பத்திரம் பதிவு செய்து சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மேற்படி இடம் தான பத்திரம் எண். 5430/2018 நாள் 20.12.2018 நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தல் முறையே விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு 26425.35 சதுரடி ஆகும். இதில் OSR இடம் 2737 சதுரடி ஆகும். மீதமுள்ள (26425.35 – 2737) 23688.35 (அ) 23689 சதுரடி அல்லது 2201 சதுர மீட்டருக்கு 2201 x 60 = 132060–க்கு வரன்முறை கட்டணமும் மற்றும் 2201 x 150 = 330150 வளர்ச்சிக் கட்டணமும் ஆக மொத்தம் `. 462210/– வசூலிக்கப்பட்டுள்ளது. வரன்முறை கட்டணம் பாரத மாநில வங்கியில் 21.1.2019–லும், வளர்ச்சிக் கட்டணம் கனரா வங்கியில் 21.1.2019–லும் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இடம் இராசிபுரம் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் பெயருக்கு தான பத்திரமாக பதிவு செய்யப்பட்டு தற்போது ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி அவர்களின் பெயரில் உள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/2720/18)



**தீர்மானம் எண். 492**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் கீழ்காணும் பணிகளை IEC நடவடிக்கைக்காக மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் `. 4.35 இலட்சம் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சுவர் விளம்பரம் (wall painting) மற்றும் பஸ் ஸ்டேண்ட் சுவர் முழுவதும் | 21 கழிப்பிடங்கள் |
| 2 | பிளக்ஸ் பேனர் (Flex Banner) (ரீப்பருடன்) | 15 |
| 3 | கழிப்பிட பலகை (Community Toilet Board) | 25 |
| 4 | Poster மூலம் awareness | 100 (போஸ்டர்) |
| 5 | Source Segregation sticker | 17000 |
| 6 | கிராமிய கலைக்குழு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 14 இடங்களில் |

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டப் பணிகளை IEC நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/259/19)

**தீர்மானம் எண். 493**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் 29.1.19 அன்று கிராமிய கலைக்குழு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பணிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | கலைக்குழுவின் பெயர் மற்றும் முகவரி | ஒரு நிகழ்ச்சிக்கு |
|---|---|---|
| 1) | இவானா டிரஸ்ட், குமாரப்பாளையம் | `. 7200/– |
| 2) | ஜீவ ஊற்று அறக்கட்டளை, மேட்டுப்பாளையம் | 7600/- |
| 3) | அன்புமலர் அறக்கட்டளை, குமாரப்பாளையம் | 7700/- |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் இவானா டிரஸ்ட், குமாரப்பாளையம் என்ற கிராமிய கலைக் குழுவிற்கு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடத்த பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், செலவினத்தை IEC நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/259/19)

**தீர்மானம் எண். 494**

அனுமதிக்கப்பட்டது



(10) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மை பாரத திட்டத்தின்கீழ் 29.1.2019 அன்று சுவர் விளம்பரம், பிளக்ஸ் பேனர் அச்சடித்தல், கழிப்பிட பலகை, போஸ்டர் மூலம் awareness

செய்தல் source segregation sticker தயாரித்தல் ஆகிய பணிக்கு மூன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | சதுரடி 1—ற்கு சுவர் விளம்பரம் | பிளக்ஸ் பேனர் | கழிப்பிட பலகை | போஸ்டர் | ஸ்டிக்கர் |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஸ்ரீநாவலடி அசோசியேட்ஸ், பரமத்தி | `. 100/— | `. 2200/— | `. 530/— | `. 30/— | `. 6/— |
| 2) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளநாயக்கன்பட்டி | 120/— | 2300/— | 570/— | 37/— | 9/— |
| 3) | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் | 130/— | 2320/— | 550/— | 35/— | 8/— |

வ.எண். 1—இல் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதன் ஒப்பந்ததாரர் ஸ்ரீ நாவலடி அசோசியேட்ஸ், பரமத்தி என்ற நிறவனத்திற்கு பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், செலவினத்தை IEC நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/259/19)

**தீர்மானம் எண். 495**

அனுமதிக்கப்பட்டது

(11) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் 40 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு தனியார் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ளும் (outsourcing) பணிக்கு கடந்த 3.1.2019 அன்று மாலை 3.30 மணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் off line பெறப்பட்டுள்ளது.

1) Relyon Facility Service Pvt. Ltd., Chennai – 97
2) Trustus outsourcing Solution Pvt. Ltd., Chennai – 91

இரண்டு Technical bid திறந்து பார்க்கப்பட்டதில் Relyon Facility Service Pvt. Ltd., Chennai – 97 என்ற நிறுவனத்தினரின் Technical bid மட்டுமே டெண்டர் நிபந்தனைகளின்படி சரியாக உள்ளது. மேலும், கடந்த 21.01.2019 அன்று காலை 11.00 மணியளவில் Relyon Facility Service Pvt. Ltd., Chennai – 97 என்ற நிறுவனத்தினரின் Financial bid – நகராட்சி ஒப்பந்த கூராய்வுக் குழு முன்னிலையில் திறந்து பார்க்கப்பட்டதில் 40 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு தனியார் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ளும் பணிக்கு (outsourcing) ஒரு துப்புரவுப் பணியாளருக்கு ஒரு நாளைக்கு `. 410/— வீதம் வழங்க கோரி அதன் ஒப்பந்ததாரர் Relyon Facility Service Pvt. Ltd., Chennai – 97 என்ற நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்படி நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி பணியினை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்தும் (SUC) மற்றும் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1475/18)

**தீர்மானம் எண். 496**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் செப்டிக் டேங்க் லாரி வகன பதிவு எண். TN 28 S 3146 என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று மற்றும் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் `. 80000/– (ரூபாய் எண்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்படி பணியை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/141/19)

**தீர்மானம் எண். 497**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.